(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No.1447/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | நித்தியா |
| த/பெ | : | சந்தனராஜ் |
| கிராமம் | : | இடிந்தகரை |
| வட்டம் | : | இராதாபுரம் |
| சாதி | : | பி.சி |
| அழைத்தல் | : | கடல் தொழில் |
| மதம் | : | கிறிஸ்தவர் |
| வயது | : | 27 |

( 1, 3, 4 எதிரிகள் ஆஜர், 2, 5 வது எதிரிகள் ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை** :–

1) நான் தற்போது இடிந்தகரையில் வசித்து வருகிறேன். நான் மீன் பிடி தொழில் செய்து வருகிறேன். அ.சா 1 என்னுடைய அப்பா. எதிரிகளை எனக்கு தெரியும்.

2) 07–01–2018–ம் தேதி, மதியம் 03.00 மணி அளவில் 1–ம் எதிரி ரோஜா என் அம்மாவிடம் ரூ.300/– ஐ கொடுத்ததை கேட்டுள்ளார். அவர் அதை திருப்பி

கொடுத்து விட்டதாக என் அம்மா கூறினார். அதற்கு என் அம்மாவை அசிங்கமாக ஏசி, திட்டினார். என் அப்பா பணத்தை திருப்பி கொடுத்து விட்டோமே என்று கூறியதற்கு வாய்தகராறு ஏற்பட்டது அதன் பின்பு அவர் சென்று விட்டார். பின்னர் மாலை 07.00 மணி அளவில் 1 வது எதிரி போன் மூலம் குமார் அவரது அண்ணன் மகன் டென்னிஸ், அக்கா மகன் அசாருதின், அஜய் ஆகியோர்களை அழைத்து எங்கள் வீட்டு முன்பு வந்து என் அப்பாவை டென்னிஸ் என்பவர் கம்பியை கொண்டு வந்து அடித்ததில் என் அப்பாவிற்கு வலது, இடது பக்க தலையில் அடிப்பட்டது.

4) என் அப்பா தடுமாறி கீழே விழுந்ததில் அஜய், அசாருதின் நெஞ்சிலும், முதுகிலும் மாறி மாறி மிதித்தார்கள் சத்தம் கேட்டு நான் சென்று தடுத்த போது குமார், அசாருதின், அஜய் ஆகியோர்கள் என்னை கையால் அடித்தார்கள். அவர்கள் அடித்ததில் என்னுடைய நைட்டியை கிழித்தார்கள். சம்பவத்தை பார்த்த சாட்சி லெனின் எதிரிகளை சத்தம் போட்டு என் அப்பா (அ.சா.1– ஐ) கூடன்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும் அவருடன் சென்றேன். நானும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு உள் நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். அதன் பின்பு மேல் சிகிச்சைக்கு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு என் அப்பாவையும், என்னையும் அனுப்பி வைத்தார்கள். அங்கு வந்து போலிசார் என் அப்பாவை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அதில் **அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை. (1,3,4 எதிரிகள் ஆஜரில் இருந்தும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை).